www.ecourtsindia.com

# Crl.Misc.39
## DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I. TIRUCHIRAPPALLI
CC 212/15

Deposition of witness for Prosecution வா.சா.1
Name : திரு ராஜரத்தினம்
Father/Wife of : த/பெ பரமசிவம்
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 08.04.2019

முதல் விசாரணை

நான் தற்போது திருச்சி புத்தூர், 15/1 இவிஆர் வீதியில் வசித்து வருகிறேன். நான் திருச்சி -தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர் சங்கத்தின் உறுப்பினராகவும், செயலாளராகவும் இருந்து வருகிறேன். எங்கள் சங்கத்தின் வைப்பு நிதி ரூ5,84,183/- தேனா வங்கியில் வைப்புத் தொகையாக இருந்தது. அதை எங்களுக்கு போட்டி சங்கமான திருச்சி-தஞ்சை- புதுக்கோட்டை, காயிதே மில்லத் மாவட்ட திரைபட விநியோகஸ்தர் சங்க நிர்வாகிகளும், செயற்குழுஉறுப்பினர்களும் 23.2.2010 தேதியிட்ட மோசடியான தீர்மானத்தை ஏற்படுத்தி தேனா வங்கியில் இருந்த மேற்படி சங்க வைப்பு தொகையை சட்ட விரோதமாக கையாடல் செய்துள்ளனர். ஏற்கனவே திருச்சி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.159/88 என்ற வழக்கு தொடரப்பட்டு ஐ.எ.எண்.184/88ல் சங்க பணத்தை எடுக்கக் கூடாது என இடைக்கால தடையுத்திரவு பெற்றிருந்தேன். அது நிலுவையில் இருந்த நிலையில் மயிலாடுதுறையில் உள்ள எங்கள் சங்க உறுப்பினர் பிரேம் சந்த் என்பவர் தொடர்ந்த சார்பு நீதிமன்ற வழக்கு 114/96 வழக்கில் எங்கள் சங்க பணத்தை கையாளக் கூடாது என பொன் தேவராஜன் மற்றும் அவர் சார்ந்த நபர்களுக்கு தீர்ப்புரை வழங்கப்பட்டிருந்த நிலையில் மேற்படி பணத்தை கையாடல் செய்துள்ளார்கள். மேற்படி அசல் வழக்கு எண்.114/96 வழக்கின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் வாசாஆ 1. அசல் வழக்கு எண்.159/88 என்ற வழக்கு சார்பு நீதிமன்றத்தில் இருந்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. மாற்றம் செய்யப்பட்ட வழக்கின் எண்.1128/96 ஆகும். அந்த வழக்கிலும், சங்க பணத்தை எதிரிகள் கையாளக்கூடாது என்பதற்காக சங்க சொத்து மற்றும் பணம்சம்மந்தமாக ரிசீவர் நியமிக்கப்பட்டு நிலுவையில் இருந்தது. அந்த ரிசீவர் நியமிக்கப்பட்ட உத்தரவு நகல் வாசாஆ2. 27.9.1993ல் சட்ட விரோதமாக ஒரு தீர்மானத்தை ஏற்படுத்தி எங்கள் சங்கம் கலைக்கப்பட்டதாக சொல்லி எங்கள் சங்க சொத்துக்களையும், கட்டிடத்தையும் கையகப்படுத்திக் கொண்டனர். 27.9.1993 தேதியிட்ட தீர்மான நகல் வாசாஆ 3. அந்த தீர்மானம்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP030016392015/truecopy/order-1.pdf

செல்லத்தக்கதல்ல என எமது சங்க உறுப்பினர்கள் ராமசந்திரன், லெட்சுமணன் தொடர்ந்த வழக்கில் விசாரணையில் 65 மோசடி கையெழுத்துக்கள் இடம், பெற்றிருப்பது நிரூபிக்கப்பட்டு , தீர்மான புத்தகம் வெளியே எடுத்துச் சென்று கையெழுத்து செய்யப்பட்டது நிரூபிக்கப்பட்டு வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு 6.10.1993ல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த அறிக்கையில் மினிட் புத்தகம் தன்னிடம் காட்டப்படவில்லை எனவும், சில ஜெராக்ஸ் நகல்கள் மட்டும் காட்டப்பட்டதாகவும் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த 3 காரணங்களாலும் அந்த வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என 14.3.2008ல் வழக்கு தீர்ப்புரை வழங்கப்பட்டது. 14.3.2008 தேதியிட்ட தீர்ப்பின் நகல் வாசாஆ 4. அந்த தீர்ப்பின் அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றத்தை அணுகி எங்கள் சங்கம் இயங்குவதற்கு உத்தரவு பெற்று அதன் அடிப்படையில் சங்கம் இயங்கி வருகிறது. அந்த ரிட் மனுவின் உத்தரவு நகல் வாசாஆ 5. என்னை சங்கத்தில் இருந்து நீக்கியது சம்மந்தமாக நான் சீராய்வு மனு தாக்கல் செய்திருந்தேன். அது எனக்கு சாதகமாக உத்தரவு ஏற்பட்டு அதன் அடிப்படையில் சங்க உறுப்பினராக உள்ளேன். சங்க கட்டிடம் திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர் சங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டும் வில்லங்கச் சான்றிதழ் வாசாஆ 6. எங்களது சங்க கட்டிடம் நெ.1 பாறையடி தெரு, திருச்சி - 2 என்ற முகவரியில் உள்ளது. மேற்படிஎதிரிகளின் செயல்களுக்காக தலைவர் எஸ்.கந்தசாமி, செயலாளரான நானும், இணை செயலாளரான டிஎஸ்எம் ரெங்கராஜன் மூவரும் சேர்ந்து எதிரிகள் 1 முதல் 24 பேருக்கு அறிவிப்பு அனுப்பினோம். அந்த அறிவிப்பு வாசாஆ 7. அதை எதிரிகள் பெற்றுக் கொண்டார்கள். பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. அதன் பின்னிட்டு வழக்கறிஞர் மூலமாக எதிரிகளுக்கு அறிவிப்பு அனுப்பினோம். (கோரிக்கையின் பேரில் முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP030016392015/truecopy/order-1.pdf